**தலைப்பு 249 - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 249 - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 11 இன் ரூபா 61,750,000,000 ஆன வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் வருமான குறியீடுகளினதும் ஆரம்ப வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் 10 வருமான குறியீடுகளின் மொத்த வருமான மதிப்பீடுகள் ரூபா 12,250,000,000 இனால் குறைக்கப்பட்டிருந்தது. 2003.05.00 திறைசேரி பிணைமுறி மிகைக் கட்டண ஆரம்ப வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 6,200,000,000 ஆன வருமானம் ரூபா 7,300,000,000 இனால் அதிகரிக்கப்பட்டு வருமான | 2020 யூன் மாதத்தில் அதாவது அரச சேவையின் பணிகள் ஓரளவுக்கு வழமைக்கு திரும்பிய காலப்பகுதியில் 11 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 61,750,000,000 ஆன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. எனினும் கொவிட் இரண்டாம் அலையுடன் மீண்டும் அரச சேவை செயலிழந்தமையால் 2021 யூலை மாதத்தின் 10 வருமான குறியீடுகளுக்கான மதிப்பீடு ரூபா 12,250,000,000 இனால் குறைக்கப்பட்டு ரூபா 56,800,000,000 ஆக திருத்தப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் முதற் காலப்பகுதியில் தடுப்பூசி போட்ட நடைமுறைகளின் ஊடாக அரச சேவை வழமைக்கு திரும்பியமைக்கு நேரடியாகத் தாக்கமளித்த 05 வருமானக் குறியீடுகளின் ஆரம்ப வருமான | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக திணைக்களத்தினால் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 4,950,000 இனால் குறைக்கப்பட்டு மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 வருமானக் குறியீடுகளிலிருந்து ரூபா 70,175,052,224 ஆன வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 5 வருமானக் குறியீடுகளின் ஆரம்ப வருமான மதிப்பீடுகளை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வருமான மதிப்பீடு செய்தல் மற்றும் அதனை திருத்தியமைத்தல் நடைமுறைக்கு பொருத்தமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மதிப்பீடுகளை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளது.<br><br>சந்தைக் குறிகாட்டிகளின் நடத்தையின் அடிப்படையில் தங்கியிருக்கும் வருமானக் குறியீடுகள் 20.03.05.00 ஆனது திறைசேரியின் பிணை முறி மிகை அறவீட்டு ஆரம்ப வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 6,200,000,000 ஆன வருமானமானது ரூபா 7,300,000,000 இனால் அதிகரிக்கப்பட்டு ரூபா 13,500,000,000 ஆக வருமான மதிப்பீடு திருத்தப்பட்டுள்ளது | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 7 வருமான குறியீடுகளின் கீழ் ரூபா 9,896,151,815 ஆன நிலுவை வருமானம் காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 8,810,689,720 தொகை 2019 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்தும் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் அந்நிலுவை வருமானத்திலிருந்து மீளாய்வாண்டின் ஒரு | விவசாய அமைச்சினதும் மீன்பிடி அமைச்சினாலும் முறையே 2021.01.11 ஆந் திகதி மற்றும் 2020.12.04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்புக்களுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தமையின் அடிப்படையில் மில்கோ நிறுவனத்திலிருந்தும் கடற்தொழில் அமைச்சினதும் நிலுவையாக காணப்பட்ட முறையே ரூபா 7,431,611,375 மற்றும் ரூபா 117,067,890 ஆன நிலுவை வருமானங்கள் மற்றும் வட்டி வருமானம் | நிலுவை வருமானங்களை செயற்திறனாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

கம்பனி ரூபா 13,000,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1,085,462,095 வருமானத்தில் மீளாய்வாண்டின் போது ரூபா 16,103,048 அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 9,896,151,815 ஆன நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 7,548,679,264 ஆன நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

அறிக்கையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த கடன் தொகையை பதிவழித்தல் தொடர்பில் உரிய முறையில் நிதியேற்பாடு மேற்கொண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய நிலுவை வட்டி வருமானத்தை கைவிடுவது தொடர்பில் நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) அவ்வாறு பதிவழிக்கப்பட்ட வருமானங்கள் திரண்ட நிதியத்திற்கு செலவின சுமையொன்று அல்லாத வகையில் கடன் பெறும் நிறுவனங்களுக்கு அரசின் மூலதன பங்களிப்பு அப்பெறுமதி செலவு வைக்கப்பட்டிருந்தது. இதுவரையிலும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட வருமானம் பதிவழிப்பதற்கு முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அதற்காக வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டிலிருந்து நிதியேற்பாட்டினை பெற்று திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். 2021 மார்ச் 3 ஆந் திகதிய TO/REV/SL/2/288 ஆம் இலக்கமுடைய பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிட்டு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம்

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் போது மில்கோ (தனியார்) கம்பனியிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 8,169,034,183.39 ஆன கடன் தொகை அரசின் முதலீடொன்றாக கருதி மூலதனமாக்குவதற்கும் வட்டியை கைவிடுவதற்கும் தீர்மானித்திருந்ததுடன் அரச முயற்சிகள் திணைக்களத்திற்கு இக்கடன் தொகையை மூலதனமாக்குவதற்கு அறிவிப்பு விடுத்துள்ளதுடன் அதற்குரிய நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணியொன்றாகும்.

நியதிச் சட்ட நிறுவனமொன்றின் மூலதன பங்களிப்புக்காக திரண்ட நிதியத்திலிருந்து நிதியேற்பாட்டினை வழங்குவதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியமை.

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறு பதிவழிக்கப்பட்ட தொகைகளும் உள்ளடக்கும் வகையில் ரூபா 8,169,034,183 தொகையானது அரச கம்பனியொன்றில் அரச மூலதன பஙகளிப்பிற்கு சேர்க்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அந்த மூலதன பங்களிப்புக்காக பாராளுமன்றத்தின் நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்ளாது அரச மூலதன பங்களிப்பு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 54,923,038 தொகை ஆண்டின் இறுதியளவில் நிலுவையாக காணப்பட்டது. அதற்கமைய 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் அவற்றுள் ரூபா 25,175,535 அறவிடப்பட்டிருந்தது. அவற்றுள் 2019 மற்றும் அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 2,348,117,006 ஆன நிலுவை வருமானம் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | 2021.12.31 ஆந் திகதியளவவில் நிலுவையாகவுள்ள ரூபா 2,373,292,541 ஆன நிலுவை வருமானத்திலிருந்து 2022.04.30 ஆந் திகதி வரையிலும் ரூபா 25,175,535 அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையும் அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. | நிலுவை வருமானத்தை செயற்திறனாக சேகரிக்க வேண்டியமை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் மூன்று மூலதன விடயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 400,450,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது முழுமையாக எஞ்சியிருந்தது. | இந்த சேமிப்புக்களுக்குரிய காரணங்கள் நிதிக்கூற்றின் ACA 2(ii) மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை சரியானதாகவும் நடைமுறைக்கு சாத்தியமானதாக வும் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக செலவின விடயங்களுக்கான குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடான ஒதுக்கீடுகளின் ஊடாக ரூபா 2,000,000,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாணடின் இறுதி வரையிலும் அவை எதுவித பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது சேகரிக்கப்பட்டிருந்தது. | வட்டித் தொகையை திட்டவட்டமாக எதிர்வுகூறல் கடினமான விடயம் என்பதால் சந்தையின் நிலைமையின் அடிப்படையில் வெளியிடப்படும் திறைசேரி உண்டியலின் அடிப்படையிலான வட்டியை செலுத்த நேரிடும் எனும் எதிர்பார்ப்பின் மேலதிகமாக நிதியேற்பாடு கோரப்பட்டது. திறைசேரியின் வட்டி வீதங்கள் திட்டவட்டமாக அதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் எதிர்வு கூற முடியாமையால் மேலதிகமாக கோரப்பட்ட நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | அத்தியவசியமான மற்றும் அவசர செலவினங்களுக் காக மாத்திரம் குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடான ஒதுக்கங்கள் ஊடாக நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டியமை. |
| (இ) | 07 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களுக்காக குறை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் அந்த நிதியேற்பாடுகள் ஆண்டினுள் பயன்படுத்திய பின்னர் ரூபா 237,178,550 எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பானது ஒவ்வொரு செலவின | இந்த சேமிப்புக்களுக்குரிய காரணங்கள் நிதிக் கூற்றுக்களின் ACA 2(ii) மூலம் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புபடும். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை சரியானதாகவும் நடைமுறைக்கு சாத்தியமானதாக வும் தயாரிக்கப்பட வேண்டியமை. |

விடயங்களுக்கான தேறிய நிதியேற்பாட்டின் 27 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் ACA 4 மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டாந்த தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்கு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ள வைப்புக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 18,969 ஆன மீதி நிலவியதுடன் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 6000-0-0-13-000 இலக்கமுடைய வைப்பு கணக்கு இந்தத் திணைக்களத்திற்கு உரித்தற்றது என்பது அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்களத்தின் புத்தகங்கள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டியமை. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 30 ஆந் திகதிய SA/MAA/02/01/01 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 2021 ஆம் ஆண்டின் நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதியானது மறை ரூபா 2,325,108,410,892 ஆக காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் தேறிய வருமானம் பெறுவனவுகள் மற்றும் வருமானம் அல்லாத நிறுவனங்களின் மொத்த செலவினங்களின் கழித்த பின்னர் 2021.12.31 ஆந் | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளை தர்க்க ரீதியாக முன்வைக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருத்தப்பட்ட ACA-7 மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரமும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி சீராக்கல் கணக்கின் மீதியானது மறை ரூபா 2,325,108,410,892 ஆக காணப்பட்டது. எனினும் கட்டுநிதி இணக்கக் கூற்றின் மீதியானது நேர் (+) ரூபா 2,325,108,410,892 ஆக காணப்பட வேண்டிய போதிலும் அது மறைப் பெறுமதி ஒன்றாக காணப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி 0 (பூச்சியம்) பெறுமதியினை கொண்டிருந்தமை நடைமுறைக்குச் சாத்தியமற்றதாக காணப்பட்டது. | திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் கட்டுநிதி மீதி மறை ரூபா 2,325,108,410,892 ஆகும். அவ்வாறே கட்டுநிதி மீதிக்கான காரணங்கள் ஏசீஏ7 மாதிரியின் அடிப்படையில் காண்பிக்கப்பட்டுள்ளது அதன் பெறுமதி மறை ரூபா 2,325,108,410,892 ஆகும். | |
| (ii) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக் களத்தின் வழிகாட்டல் | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முதலீட்டு நடவடிக்கை களிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் பண செலவினங்களாக பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளின் | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளினை சுவீகரித்தல் காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினத்தை கருத்திற் கொண்ட போது தங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | |
|---|---|
| சுவீகரிப்பாக ரூபா 6,268,445 குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக அந்த சுவீகரிப்புக்கள் ரூபா 6,663,776 ஆன காரணத்தால் முதலீட்டு நடவடிக்கை களிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 395,331 இனால் குறைத்து காண்பிக்கப் பட்டிருந்தது. | வேறுபாட்டினை காணக்கூடியதாக இருக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறு தங்களால் செலவின விடய இலக்கம் 249-1-1-2401 இற்குரிய செலவினங்கள் கருத்தில் கொள்ளப் பட்டிராததுடன் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ள செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள மையால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

### 3.1.1 அரச கடன் கணக்கு வைத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கடன்களுக்குரிய காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களை கணக்கு வைப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வெளிநாட்டுக் கடன் தீர்வைகள் மற்றும் கடன் மீள் செலுத்துதல்களுக்குரிய கடன் மீள் செலுத்தல்களுக்குரிய தரவுக் கட்டமைப்பை பேணிச் செல்வதன் பொறுப்பு இலங்கை அரசிற்கு பதிலாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் ஏற்கப்படுகின்றது. அதனால் அத்தரவுக் கட்டமைப்பில் குறிக்கப்பட்டுள்ள காசுப் | அரச கடன் பெறல்கள் மற்றும் கடன் சேவைகளை கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் கடன் கணக்கு வைத்தல் தொடர்பான மூலமாக கருத்தில் கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | அரச கடன் கணக்கு வைப்பதற்காக பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு நடைமுறை / அடிப்படை அவ்வவ்போது மாற்றப்பட்ட காரணத்தால் அரச நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தன்மையை பாதுகாக்க முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் ஆகக்குறைந்த விலைகள் கணக்கு வைக்கப்படாத காரணத்தால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 318,246 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த ஆகக்குறைந்த விலையினை கணக்கு வைப்பதற்காக ரூபா 318 பில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன் அது நடைமுறையில் அவ்வாறானதொரு பாரிய நிதியேற்பாட்டினை மேற்கொள்ளுதல் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கு காரணமாக அமைவதால் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட பிணை முறிகளுக்குரிய ஆகக்குறைந்த விலைகள் அந்த பிணை முறிகள் முதிர்வடையும் ஆண்டில் | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட எனினும் 2020.12.31 ஆந் திகதி வரையிலும் தொடர்ந்தும் முதிர்வடைய வேண்டியிருந்த திறைசேரி பிணை முறிகளுக்குரிய ரூபா 291,166 மில்லியன் கணக்கு வைக்கப்பட்டதுடன் அதற்கமைய 2020.12.31 ஆந் திகதியளவில் செலுத்துவதற்குள்ள அனைத்து திறைசேரி பிணை முறிகளினதும் முகப் பெறுமதி தற்போது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.<br><br>மேற்கூறிய வகையில் கணக்கு ஆகக்குறைந்த விலைகளின் அளவானது 2045 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதிகள் முதிர்வடைவதுடன் அந்த ஒவ்வொரு ஆண்டுகளினதும் முதிர்வடையும் போது அந்த பிணை முறிகளின் புத்தகப் பெறுமதியினைப் போன்றே ஆகக்குறைந்த விலையினையும் மீள செலுத்துவதற்கு உரிய ஆண்டுகளில் பாதீட்டின் | சரியானதும் முறையானதுமான நடைமுறைகள் / அடிப்படைகளை கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்குவதற்கும் அதுவரையிலும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பொன்றாக இந்த பிணை முறிகளின் முகப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அவ்வாறு நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்ளாது அந்த பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | வருடாந்த நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>எவ்வாறான போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்பட்ட ரூபா 291,166 மில்லியனான ஆகக்குறைந்த அளவிலிருந்து 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டது ரூபா 276,939,878,174 ஆன ஆகக்குறைந்த விலையின் அளவே ஆகும். | |
| (ii) | 2020 ஆம் ஆண்டின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மத்திய வங்கியின் முற்பணங்கள், உள்நாட்டு கடன்களாக வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய காரணங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது அந்த மத்திய வங்கியின் முற்பண மீதியான ரூபா 150.1 மில்லியன் உள்நாட்டுக் கடன் வகைப்படுத்தலிலிருந்து அகற்றப்பட்டு தனியானதொரு உருப்படியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகளை தயாரிக்கும் பொறுப்பு அரச கணக்குகள் திணைக்களத்திற்கே சாட்டப்பட்டுள்ளதுடன் அதற்கமைய 2021 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுக் கடனாக வகைப்படுத்தப் பட்டிருந்த மத்திய வங்கியின் முற்பண மீதியான ரூபா 150.1 மில்லியன், உள்நாட்டுக் கடன் வகைப்படுத்தலிலிருந்து அகற்றுதல் தொடர்பில் அரச கணக்குகள் திணைக்களத்திடம் கோருதல் பொருத்தமானதாகும். | சரியானதும் முறையானதுமான நடைமுறைகள் / அடிப்படைகளை கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டினதும் 2020 ஆம் ஆண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தீர்வையாகிய போதும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி முறையே ரூபா 16,883.6 மில்லியன் மற்றும் ரூபா 21 மில்லியன் ஆகும். எவ்வாறான போதிலும் இந்தப் பெறுமதி மற்றும் உள்ளபடியான கணிப்பீடுகளின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மீளாய்வாண்டினை போன்றே கடந்த வருடங்களிலும் தீர்வையாகிய போதிலும் கணக்கு வைக்கப்படாத பெறுமதிகள் காணப்படின் அவ்வாறு கணக்கு வைக்காமைக்கான காரணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த அமைச்சிற்கு சொந்தமான 2021 ஆம் ஆண்டின் போதிய பாதீட்டு ஒதுக்கீடு இல்லாதிருந்தமை மற்றும் குறித்த செயற்திட்டத்தினால் 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான செலவினங்கள் சான்றுப்படுத்தப்படாமை காரணமாக வெளிநாட்டுக் கடன் கணக்கு வைக்க முடியாதிருந்தது. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைப்படுத்தல் கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ii) | அதற்கமைய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன் பெறுமதி தவறானது என்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைப்படுத்தல் கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்ட எனினும் 2020 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 5,671 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய குறித்த ஆண்டினுள் தீர்வையாகிய போதிலும் அவ்வாண்டினுள் | குறித்த அமைச்சிற்கு சொந்தமான 2021 ஆம் ஆண்டில் போதிய வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாதிருந்தமை மற்றும் குறித்த செயற்திட்டத்தினால் செலவினங்கள் சான்றுறுதிப்படுத்தப்படும் போன்ற காரணங்களினால் ஆண்டினுள் தீர்வையாகிய அனைத்துக் கடனும் அவ் ஆண்டினுள்ளேயே கணக்கு | அரச கடன் பெறல் மற்றும் கடன்சேவை உட்படுத்தல் கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சில வெளிநாட்டுக் கடன் கணக்கு வைக்கப்படாமை தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | வைக்க முடியாதிருந்தது. | |
| (உ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிநாட்டுக் கடன் மூலங்களான CS-DRMS 2000+ Report 854-1 மற்றும் அத்திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கிடையே கடன் இலக்கம் 2001042 இற்குரிய ரூபா 240 மில்லியனான வேறுபாடொன்று நிலவியது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அரச கடன் பெறல் மற்றும் கடன்சேவை உட்படுத்தல் கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான CS-DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்ட கடன் உடன்படிக்கைகள் 08 இற்குரிய கூட்டுத்தொகை ரூபா 311,191 மில்லியனான வெளிநாட்டுக் கடன் பெறுமதி, அரச நிதிக் கூற்றுக்களில் முழுமையாக அகற்றப்பட்டிருந்ததுடன் அதனுள் காணப்பட்ட ஹம்பாந்தோட்டடை துறைமுக நிர்மாணத்திற்காக அரசு பெற்றுக் கொண்டிருந்த ரூபா 161,132 மில்லியன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 311,190 மில்லியன் தொகையானது அந்த கடன் தொகையின் கீழ் குறித்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டிய பொறுப்பொன்றாகும். | அரச கடன் பெறல் மற்றும் கடன்சேவை உட்படுத்தல் கணக்கு வைத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (எ) | அரசினால் 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடப்பாடுகளின் கீழான | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 854-1 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் அந்த பெறுமதி | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | கடன் உடன்படிக்கை ஒன்றிற்குரிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளபடியாக நிலவிய ரூபா 589 மில்லியனான கடன் மீதி அரசின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| (ஏ) | CS-DRMS 2000+ Report 854-1 அறிக்கையில் இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய கடன் பயன்பாட்டு நாணய அலகு (Loan Currency) யூரோ (EUR) ஆக கருத்தப்பட்டிருந்த போதிலும் அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது சி.கொ.ஓ (XDR) மற்றும் ஐ.அ.டொலர் (USD) ஆக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரே கடன் மீதிக்காக வேறுபட்ட கடன் பயன்பாட்டு நாணய அலகுகளுக்குரிய செலவாணி மாற்ற வீதங்கள் பயன்படுத்தப்பட்டமையால் அரசின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 340 மில்லியன் மற்றும் ரூபா 285 மில்லியனான வேறுபாடுகள் நிலவின. | செயற்திட்டங்கள் தொடர்பில் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் கோருதல் பொருத்தமானது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| (ஐ) | CS-DRMS 2000+ Report 854-1 இன் பிரகாரம் இரு கடன் இலக்கங்களுக்குரிய ரூபா 12,463 கூட்டுத்தொகையான மறைப் பெறுமதியொன்று நிலவியது. அவ்வாறு மறைப் பெறுமதியொன்று நிலவுவதற்கு தாக்கமளிக்கும் கடன் தொகை கூடுதலாக மீள | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிராமை தொடர்பில் சான்றுப்படுத்தும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஒ) | இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 1,481,264 ஆன மறைக் கடன் மீதி அரசின் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அக்கடன் மீதிகள் மறைப் பெறுமதியொன்றை எடுப்பதற்கு மற்றும் அப்பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்படுவதற்கு காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டின் இறுதி வரையிலும் செலாவணி நட்ட கடன் கணக்கிற்கும் சொத்துக்கள் கணக்கிற்கும் மாத்திரம் சீராக்கம் செய்யப்படும். எவ்வாறான போதிலும் அட்டுறு அடிப்படையில் கணக்குகளை தயாரித்தல் மேற்கொள்ளப்படாமையால் குறித்த நட்டத்தினை நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்குதல் இடம்பெறுவதில்லை. | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| (ஓ) | கடன் இலக்கம் 2010107 இற்குரிய ரூபா 233,844 ஆன கடன் மீதியொன்று அரசின் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அது அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இத்தொகை மத்திய வங்கியில் பேணிச் செல்லப்படும் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது 2021.09.01 ஆந் திகதியே என்பதால் குறித்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இரு தினங்களில் இடம்பெற்ற செலாவணி மாற்று விலகல்கள் காரணமாகவே ஆகும். | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| (ஔ) | அரச நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு இலக்கம் 29(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 20,247 மில்லியனான கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் CS-DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப் பட்டிராமையால் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் பதில் வழங்கப்பட வேண்டும். | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

அம்மீதியை உறுதிப்படுத்துவதற்குரிய மூலஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.1.2 திறைசேரி பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வெளியிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வெளிவாரி நிறுவனங்களுக்கு 241 சந்தர்ப்பங்களில் ரூபா 1,813,176 மில்லியனான வங்கி பிணைகள் மற்றும் 23 சந்தர்ப்பங்களில் ரூபா 81,268 மில்லியனான நிவாரணக் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. திறைசேரியின் பிணைமுறி காலாவதியானமை அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் 27 சந்தர்ப்பங்களுக்குரியதாக ரூபா 74,360 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,886 பெறுமதியுடைய திறைசேரி பிணை முறிகள் மற்றும் 12 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 29,550 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 160 மில்லியன் பெறுமதியுடைய நிவாரணக் கடிதங்களுக்குரிய காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2021 அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட நிவாரணக் கடிதங்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 1,832,112,103 ஆன கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. அதனுள் மிஹின் லங்கா கம்பனிக்காக வழங்கப்பட்ட 06 பிணைகள் உள்ளடங்கலாக ரூபா 1,740 மில்லியனான வட்டித் தொகை மற்றும் ரூபா 91 மில்லியனான கடன் தவணைப் பெறுமதியும் | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 880 மில்லியனான பிணை முறிப் பெறுமதி தொடர்பில் வரிசை அமைச்சிற்கு அறிவித்து நிவாரணக் கடிதங்களுக்குரிய கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நிவாரணக் கடிதங்களின் செல்லுபடியான காலத்தை நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக 2020.11.20, 2021.03.18 மற்றும் 2021.11.09 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் பதில் கிடைக்கவில்லை. | வங்கிப் பிணைகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் செயன்முறை முறையான தாகவும் நாளது வரையாகவும் பேணப்பட வேண்டியமை. |

உள்ளடங்கியுள்ளது. 02 நிறுவனங்களுக்கு அளவில் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 880 மில்லியனான திறைசேரி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களுக்குரிய செல்லுபடியான காலம் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வங்கிப் பிணைகள் மற்றும் கடிதங்களை வழங்கிய நிறுவனங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கோவை பரிசோனையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனிக்கு வழங்கப்பட்ட திறைசேரி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்கள்**

---------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனிக்கு 2016 ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியினால் 8 தடவைகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 200 மில்லியன் மற்றும் ரூபா 26,250 மில்லியன் எனுமாறு குறுங்கால கடன்கள் மற்றும் மக்கள் வங்கியின் ஐக்கிய அமெரிக்க டொலர் 5.38 மில்லியன் மற்றும் ரூபா 1.352 மில்லியன் எனுமாறு மூலதனமாக்கப்பட்ட வட்டி வசதிகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடனுக்காக திறைசேரி பிணை முறி மற்றும் நிவாரணக் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | அவதானிப்பு சரியானதாகும். | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை உரிய முறையில் நாளது வரையாகவும் பேணப்பட வேண்டியமை. |
| (ii) அரச வங்கிகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்படி கடன் வசதிகளுக்கு மேலதிகமாக 2024 யூன் மாதத்தில் மீள செலுத்த வேண்டிய 5 வருட சர்வதேச | அவதானிப்பு சரியானதாகும். | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை உரிய |

| | | | |
|---|---|---|---|
| | பிணை முறி ஒன்றின் ஊடாக ஐக்கிய அமெரிக்க டொலர் 175 மில்லியன் நிதியினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனிக்காக பிணை சான்றிதழ் ஒன்று இலங்கை அரசினால் வழங்கப்பட்டிருந்தது. | | முறையில் நாளது வரையாகவும் பேணப்பட வேண்டியமை. |
| (iii) | 2016 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்கன் கம்பனியின் செயலாற்றல் மிகவும் பாதகமான நிலைமையில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக எதிர்பார்த்தவாறு கடன் பணத்தை தீர்க்க முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பு சரியானதாகும். | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை உரிய முறையில் நாளது வரையாகவும் பேணப்பட வேண்டியமை. |
| (iv) | 17/2383/733/026-1 இலக்கத்தின் மூலம் மிஹின் லங்கா விமானக் கம்பனியை கலைப்பதற்காக அமைச்சு / சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2020 சனவரி 30 ஆந் திகதிய MF/PE/CM/2020/12 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் மீள் கட்டமைக்கும் நடைமுறையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அந்நிறுவனம் (NAPPP-NATIONAL AGENCY FOR PUBLIC PRIVATE PARTNERSHIP) இதுவரையிலும் நடைமுறைப் படுத்தப்படாமையால் அரசினால் இலங்கை | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை உரிய முறையில் நாளது வரையாகவும் பேணப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| விமானக் கம்பனியின் எதிர்காலம் தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கும் வரையிலும் நிவாரணக் கடிதங்கள் மீண்டும் மீண்டும் விநியோகிப்பதற்கு நேர்கின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| **(ஆ) மிஹின்லங்கா கம்பனிக்கு வழங்கப்பட்ட திறைசேரி பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்கள்** | | |
| (i) 2015 யூலை 14 ஆந் திகதிய PE/AV/SLA/CM/2015 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் ஊடாக இலங்கை விமான சேவையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக இலங்கை வங்கியிலிருந்து ரூபா 1,650 ஆன குறுங்கால கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இக்கடன் தொகை செலுத்த வேண்டிய கால எல்லை 2016 மார்ச் 31 ஆந் திகதி நிறைவடைந்திருந்தது.<br><br>எனினும் கடன் தொகையை மீள செலுத்தும் காலஎல்லை தொடர்ச்சியாக நீடிப்புச் செய்யப்பட்டு நிவாரணக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறான போதிலும் இறுதி திகதி நீடிக்கப்படல், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடும் பணிகள் நிறைவு செய்யப்படும் வரையிலும் ஆகியவற்றின் முதலாவதாக இடம்பெறும் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இவ் நிவாரணக் கடிதத்தின் செல்லுபடிக் காலம் 2022.12.31 ஆந் திகதி வரையிலும் நீடிப்புச் செய்யப்பட்டது. | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மிஹின் லங்கா தனியார் கம்பனியினால் மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணத்திற்காக 2020 திசெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் மூலதனத்தின் பகுதியாக ரூபா 1,000 மில்லியன், மக்கள் வங்கியிலிருந்து திறைசேரிக்கு 2021 ஆம் ஆண்டிற்குரியதாக பெற வேண்டிய ரூபா 1,000 ஆன பங்கிலாபத்திற்கு ஈடுசெய்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அக்கடன் தொகைக்காக 2020 திசெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய வட்டியாக ரூபா 831.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | மிஹின் லங்கா தனியார் கம்பனியினால் மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணத்திற்காக 2020.12.21 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் மூலதனத் தொகையின் பகுதியாக ரூபா 1,000 மில்லியன், மக்கள் வங்கியிலிருந்து திறைசேரிக்கு 2021 ஆம் ஆண்டிற்கு உரியதாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 1,000 ஆன பங்கிலாபத்திற்கு ஈடுசெய்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறே, மிஹின் லங்கா தனியார் கம்பனியினால் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திற்காக 2020.12.21 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய வட்டியாக ரூபா 831.4 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை விநியோகிக்கும் நடைமுறை உரிய முறையிலும் நாளதுவரையாகவும் பேணப்பட வேண்டியமை. |
| (iii) | இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,650 மில்லியனான கடன் தொகையில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,560,962,436 ஆன நிலுவை மூலதன மீதியொன்றும் ரூபா 180,765,865 ஆன வட்டி மீதியுமாக ரூபா 1,741,728,301 கூட்டுத்தொகையான நிலுவைப் பணம் தொடர்ந்தும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | ரூபா 1,650 மில்லியனான கடன் தொகையில் 2021 ஒக்தோபர் 30 ஆந் திகதியளவில் ரூபா 1,560,962,436 ஆன நிலுவை மூலதன மீதியும் ரூபா 180,765,865 ஆன வட்டி மீதியுமாக ரூபா 1,741,728,301 ஆன நிலுவை தொகையும் தொடர்ந்தும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | வங்கி பிணை முறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை விநியோகிக்கும் நடைமுறை உரிய முறையிலும் நாளதுவரையாகவும் பேணப்பட வேண்டியமை. |

**3.1.3 வெளிநாட்டு மானியங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு மானியங்களின் மூலம் நிறைவேற்றப்படும் 80 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10,704,894,161 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் 76 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,416,022,632 ஆன கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. கட்டுநிதி விடுவித்தல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் 32 சதவீதம் மாத்திரமாக காணப்பட்டது. | வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் மானியங்கள் உரிய இலக்குகள் / நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்காக அரச வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு அமைச்சுக்களின் / திணைக்கள்ங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு நிதியேற்பாடு ஒதுக்கப்படும்.. வெளிநாட்டு மானியங்களுக்கு உரியதாக கிடைக்கும் நிதி ரீதியான வழங்கலை அறிக்கையிட்டு பேணிச் செல்லல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கோரிக்கையின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் அவ்வவ்போது கட்டுநிதி அவ்நிறுவனத்திற்கு விடுவிக்கப்படும். | வழங்குனர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மானியங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பில் இணைப்பு மற்றும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது 33 நன்கொடையாளர்களி-னால் 137 சந்தர்ப்பங்களில் ரூபா 2,483,653,900 ஆன வெளிநாட்டு மானியங்கள் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது | 2021 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு மானியங்களாக காசாக ரூபா 2,483,653,900 மாத்திரம் கிடைத்துள்ளது. அவ்வாறே ஆண்டின் இறுதியளவில் 45,620,543 மாத்திரம் மீண்டும் | கிடைத்த வெளிநாட்டு மானியங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் தொடர்பில் கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றுள் ரூபா 45,620,543 மீண்டும் நன்கொடையாளர் களுக்கே திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | நன்கொடையாளர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.<br><br>குறித்த பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் பரிந்துரையின் மாத்திரம் அப்பணம் நன்கொடையாளர் களுக்கு மீள அனுப்புவதற்கு இத்திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டியமை. |
| (இ) | உலக சுகாதார அமைப்பினால் (WHO) சுற்றாடல் அமைச்சிற்கு வடமத்திய மாகாணத்தின் Recycling Used Agro Chemical Containers செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,759,670 ஆன வெளிநாட்டு மானியங்கள் மீண்டும் நன்கொடையாளருக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | உலக சுகாதார அமைப்பினால் சுற்றாடல் அமைச்சின் செயற்திட்டமொன்றிற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி காலப்பகுதியில் ரூபா 1,827,920 ஆன மானியமொன்று இத்திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்தொகையை பயன்படுத்தியதன் பின்னர் தொடர்ந்தும் எஞ்சியிருந்த ரூபா 1,759,670 ஆன தொகை வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. மேலும் செயற்திட்டக் காலம் நிறைவடைந்துள்ளதாக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சுற்றாடல் அமைச்சினால் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் மற்றும் உலக சுகாதார தாபனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டு வெளிநாட்டு மானியங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,759,670.00 ஆன தொகை மாத்திரம் மீள அனுப்பப்பட்டமை இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வழங்குனர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மானியங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பில் இணைப்பு மற்றும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வெளிநாட்டு உதவி செய்யும் செயற்திட்டங்களிலிருந்து பயன்படுத்தப்படாத ரூபா 39,794,102 ஆன மானியங்கள் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்படுவதற்கு அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மானியத்தினை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு மானியங்களின் கீழ் ரூபா 39,794,102.38 மாத்திரம் ஆண்டின் இறுதியளவில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்ட திகதி முதல் 2 வருட காலப்பகுதியினுள் நன்கொடையாளரினால் உரித்து கோரப்படாத அவ்வைப்புக்கள் காலாவதியான வைப்புக்களாக கருத்தில் கொள்ளப்படுவதால் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்திய அமைச்சு / திணைக்களத்தினால் வழங்கப்படும் பரிந்துரைகளின்<br><br>அடிப்படையில் மாத்திரம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்குனர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மானியங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பில் இணைப்பு மற்றும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 3 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,468,579 ஆக காணப்பட்டது. அவ்வைப்புக் கணக்குகள் வெளிநாட்டு மானிய பெறுவனவுகளுக்கு உரியமை என்பதுடன் அந்த மீதிகள் பல வருடங்களாக செயலற்று காணப்படுகின்றன. அந்த மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறல்லாது காணப்படின் அவை | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் குறித்த நிதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனில் குறித்த அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் அப்பணத்தை அரச வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>இந்த பணமும் 2022 ஆம் ஆண்டின் போது பயன்படுத்த முடியாதிருப்பின் இவ்வாண்டின் இறுதியில் குறித்த அமைச்சு மற்றும் நிறுவனத்தின் பரிந்துரைகளின் | வழங்குனர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மானியங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பில் இணைப்பு மற்றும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | அடிப்படையில் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். |

### 3.1.4 காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கடன்பெறும் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் பெறுமதி ரூபா 1,235,000 மில்லியன் ஆன போதிலும் மீளாய்வாண்டின் திறைசேரி பிணை முறிகளாக ரூபா 1,742,938 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய திட்டமிடப்பட்ட இலக்கு ரூபா 507,938 மில்லியனால் அல்லது 41 சதவீதத்தினால் பிணை முறிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட கடன் பெறல் எல்லையினுள் திணைக்களம் செயற்பட்டுள்ளதுடன் அவ்எல்லையினுள் ஒவ்வொரு கடன் பெறும் ஒவ்வொரு கடன்பெறும் உபகரணங்களையும் ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட எல்லைகளில் தளம்பல்கள் ஏற்பட்டுள்ளது. இதற்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது ஒட்டுமொத்த பொருளாதார வீழ்ச்சியின் அடிப்படையில் இலங்கை தரப்படுத்தலின் பிரகாரம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக வெளிநாட்டு கடன் பெறல் மட்டுப்படுத்தப்பட்டமையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட தீர்ப்பதற்காக உள்நாட்டு சந்தைக்கு வெளியிடப்பட்ட திறைசேரி பிணைமுறிகள் அதிகளவில் வெளியிட நேர்ந்துள்ளமை ஆகும். | உரிய முறையில் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.1.5 கட்டுநிதி விடுவித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களாக முறையே ரூபா 2,694,152 மில்லியன் மற்றும் ரூபா 1,095,019 மில்லியன் எனுமாறு ரூபா 3,789,171 மில்லியன் நிதியேற்பாடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வவாண்டின் போது மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களாக ரூபா 2,757,343 மில்லியன் மற்றும் ரூபா 789,636 மில்லியன் எனுமாறு ரூபா 3,546,979 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சு மற்றும் 185 திணைக்களங்கள் 103 அரச நிறுவனங்கள் 38 பல்கலைக்கழகங்கள் மற்றும் 34 மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாண சபைகள் எனுமாறு 360 நிறுவனங்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 1,737,080 மில்லியனும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 717,599 மில்லியனுமாக ரூபா 2,454,679 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டுநிதி எல்லைகள் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறித்த நிறுவனங்கள் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 1,929,136 மில்லியனும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 982,069 மில்லியனும் எனுமாறு ரூபா 2,911,205 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டுநிதி கோரியிருந்தது. எவ்வாறான போதிலும் திறைசேரியினால் | அமைச்சு அல்லது திணைக்களங்களுக்கு திறைசேரியினால் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக கட்டுநிதி விடுவிக்கும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.<br>• அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் நாளாந்தம் / மாதாந்தம் மேற்கொள்ளப்படும் கட்டுநிதி கோரிக்கைகள்<br>• அமைச்சு மற்றும் திணைக்களத்திற்குரிய உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் உள்ள நாளாந்த வங்கி / பண மீதிகள்<br>• திரண்ட நிதியத்தின் கீழ் உள்ள பணத்தின் நிலைமைகள்<br>• மேற்படி முகாமைத்துவத்தின் அறிவுரைக்கமைய தேசிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய முன்னுரிமைகள்<br>• அரச கடன் சேவைப்படுத்தல், சம்பள மற்றும் வேதனங்கள், ஓய்வூதியம், சமுர்த்தி நிவாரணம் போன்ற அத்தியாவசியமான கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.<br>• உள்நாட்டு நிதி சந்தையினுள் அரச கடனை பெற்றுக் | மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்காக கட்டுநிதி விடுவித்தல் உரிய முறையில் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

அவ்வாறு கோரப்பட்ட கட்டுநிதி முழுமையாக விடுவிக்கப்படாது ஆகக்குறைந்த கட்டுநிதி எல்லையினை விடவும் அதாவது மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 1,657,642 மில்லியனும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 410,891 மில்லியனும் எனுமாறு ரூபா 2,068,533 மில்லியனான கட்டுநிதி குறித்த நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீண்டெழும் செலவினங்களுக்காக நிறுவனங்களினால் கோரப்பட்ட கட்டுநிதி ரூபா 271,494 மில்லியன் அல்லது 14 சதவீதமும் மூலதன செலவினங்களுக்காக நிறுவனங்களினால் கோரப்பட்ட கட்டுநிதியின் பெறுமதி ரூபா 571,178 மில்லியன் அல்லது 58 சதவீதமுமாக ரூபா 842,672 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டுநிதி திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 360 நிறுவனங்களுக்குரியதாக கோரப்பட்டிருந்த பணப் பெறுமதி மற்றும் விடுவிக்கப்பட்ட கட்டுநிதியின் பெறுமதியினை இணக்கம் செய்யும் போது கோரிக்கை விடுத்த கட்டுநிதி பெறுமதிக்கு ஒப்பாக மீண்டெழும் செலவினங்கள் 86 சதவீதமும் மூலதன செலவினங்களாக 42 சதவீதமுமாக கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டின் பிரகாரம் ரூபா 345,555 மில்லியன் அல்லது 14 சதவீதம் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை.

கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அங்கு நிலவும் திரவத் தன்மை நிலைமைகள் மற்றும் நிதி கிரயம் தொடர்பிலான விடயங்களை நேரடியாக திறைசேரியின் காசுப்பாய்ச்சல் தொடர்பில் தாக்கமளித்தல்

- அவ்வாறே 2021 கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அரச வருமானத்திற்கு ஏற்பட்ட பொருண்மையான தாக்குதல். அதற்கமைய 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் திறைசேரியினால் கட்டுநிதி விடுவிக்கும் போது மேற்படி விடயங்களை கருத்தில் கொண்டு பொருளாதார ரீதியாகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் கட்டுநிதி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் 20 வெற்றிடங்கள் நிலவியதுடன் அவற்றுள் 08 வெற்றிடங்கள் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளாகும். | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் 20 வெற்றிடங்கள் நிலவுவதுடன் சிரேஷ்ட மட்டத்திலான 08 வெற்றிடங்கள் நிலவின. 2021.07.02 ஆந் திகதி பதவியணி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை பெற்றுத்தருமாறு எழுத்துமூலம் கோரி உரிய தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பணிப் பொறுப்பினை நிறைவேற்று வதற்கு அத்தியவசியமான பதவிகளை நிரப்புவதற்கு அவசியமான பதவிகள் காணப்படின் அவற்றை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |